2009 ஜூலை 21]

(ஆஏ) அச்சரப்பாக்கம் தொகுதி, மழைநீரில் விழுந்து இறந்த குழந்தையின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன். (குறுக்கீடு) சீக்கிரம் சொல்லி முடியுங்கள்.

திருமதி சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை வெள்ள நேரத்தில் என்னுடைய தொகுதியில் இடைக்கழிநாடு பேரூராட்சியில் உள்ள கடப்பாக்கத்தில், மண் பாண்டம் செய்து பிழைப்பு நடத்தி வந்த ஓர் இளம் விதவைப் பெண்ணின் குழந்தை, தேங்கிய மழைநீரில் விழுந்து இறந்து விட்டது என்று தெரிவித்து நிதி கேட்டு விண்ணப்பித்திருந்தோம். முறையாக மனு கொடுத்திருக்கிறோம். கருணை மிகுந்த மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களும் நிதி வழங்க உதவிடுவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

(ஆ) அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை ஏற்றத்தால் பொதுமக்களிடையே ஏற்பட்ட நிலை குறித்து அ.இ.அ.தி.மு.க.வின் சார்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. டி. ஜெயக்குமார், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக திரு. சி. ஞானசேகரன் அவர்களும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. அ. தமிழரசு, திரு. தி. வேல்முருகன், திரு. தி.க. ராஜா, திரு. கி. ஆறுமுகம், திரு. வை. காவேரி, டாக்டர் க. நெடுஞ்செழியன் ஆகியோரும், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. கே. மகேந்திரன், திருமதி ரா. லீமா றோஸ், திருமதி ஜி. லதா ஆகியோரும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக திரு. வை. சிவபுண்ணியம், திரு. சு. குணசேகரன், திருமதி பி. பத்மாவதி, திரு. எஸ். இராசசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. தி. இராமசாமி ஆகியோரும் மாண்புமிகு சுயேச்சை உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்களும் விதிகள் *55* மற்றும் *56*—ன்கீழ்